*Available online at:* [http://www.advancedscientificjournal.com](http://www.advancedscientificjournal.com)
[http://www.krishmapublication.com](http://www.krishmapublication.com)
*IJMASRI, Vol. 1, issue 1, pp. 182- 187, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# கண்டாச்சிபுரத்தில் காணப்படும் கழுவேற்றச் சிற்பங்கள் - ஓர் ஆய்வு

**மோகன்ராஜ் ரா**

ஈராண்டு கல்வெட்டியல் முதுநிலை பட்டையம், தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, எழும்பூர் 08.

## ஆய்வுச் சுருக்கம்

*குற்றம் செய்யும் ஒவ்வொருவருக்கும் அதற்கான தண்டனை வழங்கப்படும். அத்தண்டனையானது குற்றங்களைப் பொறுத்தே விதிக்கப்படும். அவ்வகையில் குற்றம் என்ற ஒன்றை கனவில் கூட நினைத்துப் பார்க்காத அளவிற்கு ஓர் கொடூரமான மரணத் தண்டனையாக* ***கழுவேற்றம்*** *(Impalement) என்ற முறை அப்பொழுது வழக்கத்தில் காணப்பட்டது. இக்கழுவேற்றம் என்பது ஒரு கூர்மைப்படுத்தப்பட்ட மரம் ஒன்றில் குற்றம் செய்த குற்றவாளியை அவருடைய ஆசன வாய் வழியாக கழுமரத்தில் ஏற்றுவர். அக்கழுமரத்தில் கழுவேற்றத்திற்கு முன்பு கழுமரத்தின முழுவதும் எண்ணெய் தடவி கழுவேற்றப்படக் கூடிய குற்றவாளியின் ஆடைகள் அனைத்தையும் அகற்றி நிர்வாணமாக குற்றவாளியை தூக்கி அக்கழுமரத்தின் கூர்மையான பகுதியில் கொண்டு சென்று குற்றவாளியின் ஆசனவாயினை கழுமுனையில் வைத்து அப்படியே சொருகி விடுவார்கள். உடலின் எடையால் உடல் கீழே இறங்கும் குற்றவாளி துடிதுடித்து இறந்து போவான். பிறகு அவனுடைய உடலை இறக்கி சடங்கு நடத்தாமல் அப்படியே விட்டு விடுவார்கள். அவனது உடலை விலங்குகள், பறவைகள், பருந்துகள் அவ்வுடலைச் சாப்பிட்டு விட்டு போகும். இக்கழுவேற்றம் பற்றி இலக்கியங்களிலும், கோயில் சிற்பங்களிலும் – ஓவியங்களிலும் மற்றும் முந்தைய ஆய்வாளர்களின் ஆய்வுகள் மூலமாகவும் கண்டாச்சிபுரம் கழுவேற்ற சிற்பங்களைப் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**குறிச்சொல்** : *கழுவேற்றம் - பண்டையத் தண்டனை - பெரியப்புராணம் - திருவிளையாடல் புராணம் - கழுவேற்ற சிற்பங்கள் - சமண கழுவேற்றம்.*

## முன்னுரை

*குற்றம் செய்யும் ஒவ்வொருவருக்கும் அதற்கான தண்டனை வழங்கப்படும். அத்தண்டனையானது குற்றங்களைப் பொறுத்தே விதிக்கப்படும். அவ்வகையில் குற்றம் என்ற ஒன்றை கனவில் கூட நினைத்துப் பார்க்காத அளவிற்கு ஓர் கொடூரமான மரணத் தண்டனையாக* ***கழுவேற்றம்*** *(Impalement) என்ற முறை அப்பொழுது வழக்கத்தில் காணப்பட்டது. இக்கழுவேற்றம் என்பது ஒரு கூர்மைப்படுத்தப்பட்ட மரம் ஒன்றில் குற்றம் செய்த குற்றவாளியை அவருடைய ஆசன வாய் வழியாக கழுமரத்தில் ஏற்றுவர். அக்கழுமரத்தில் கழுவேற்றத்திற்கு முன்பு கழுமரத்தின முழுவதும் எண்ணெய் தடவி குழுவேற்றப்படக் கூடிய*

குற்றவாளியின் ஆடைகள் அனைத்தையும் அகற்றி நிர்வாணமாக குற்றவாளியை தூக்கி அக்கழுமரத்தின் கூர்மையான பகுதியில் கொண்டு சென்று குற்றவாளியின் ஆசனவாயினை கழுமுனையில் வைத்து அப்படியே சொருகி விடுவார்கள். உடம்பின் எடையால் உடல் கீழே இறங்கும் குற்றவாளி துடிதுடித்து இறந்து போவான். பிறகு அவனைய உடலை இறக்கி சடங்கு நடத்தாமல் அப்படியே விட்டு விடுவார்கள். அவனது உடலை விலங்குகள் பறவைகள் பருந்துகள் அவ்வுடலைச் சாப்பிட்டு விட்டு போகும். இக்கழுவேற்றம் பற்றி இலக்கியங்களிலும் கோயில் சிற்பங்களிலும் – ஓவியங்களிலும் மற்றும் முந்தைய ஆய்வாளர்களின் ஆய்வுகள் மூலமாகவும் கண்டாராய்ச்சியாம் கழுவேற்ற சிற்பங்களைப் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். இது குறித்த கீழ்கண்ட தலைப்பிகளில்

**இலக்கியங்களில் கழுவேற்றம்**

கழுவேற்றம் என்ற மரண தண்டனைகள் பற்றி இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இதில் குறிப்பாக பெரியபுராணத்தில் சேக்கிழார்,

**தோற்றவர் கழுவி லேறித்** [1]

எனக் கொடுக்கும் இப்பாடல் கழுவேற்றத்தினைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஒரு இலக்கியச் சான்றாக விளங்குகிறது.

இதனைத் தொடர்ந்து திருமந்திரத்தில் கழுவேற்றத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவை,

**கத்தித் திரிவர் கழுவடை நாய்கள்போல்**
**கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்**
**ஒத்துப் பொறியும் உடலும் இருத்தவும்**
**செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே.** [2]

அனுபவத்தால் இன்பம் உறாது பேச்சினாலே இன்பம் அடையும் நாவறிவுடைய சிலர். கழுமரக்கழியில் நின்று அதன் உச்சியில் உள்ள உடல் எட்டாதபொழுது குரைத்தலையும், சிறிது எட்டிய பொழுது அதனைக் கடித்தலையும் செய்கின்ற நாய்களைப் போலக் காம அறிந்தவற்றைக் காலம், இடம், தகுதி முதலியவற்றை நோக்காமலே உரக்க எடுத்துப் பேசுதலும், காமம் முதலியன சிறிது வாய்த்த வழிக் கேட்டதாக உள்ளத்தை அலைத்தலும் செய்து திரிவார்கள். சிவஞானத்தை அடையாளமாக அடைந்தோர் வாக்கும், காயமும் வன்மைபெற்றிருப்பினும் செத்தவரைப்போலயாதும் உரையாதே, எவ்விடமும் இடமாக உலாவிவருவர்.

என்ற பொருள் விளக்கத்துடன் கழுவேற்றத்தைப் பற்றி திருமந்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நா.சீனிவாசன் என்பவர் "திருவிளையாடல் புராணம்" என்ற புத்தகத்தில் கழுவேற்றம் பற்றி குறிப்பிட்டுள்ளார். அவை,

**சமணரைக் கழுவேற்றிய படலம்**

கூன் பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்த அற்புதம் பெரிய மாற்றத்தை விளைவித்தது. பாண்டியனின் உடல் நோயும் தீர்ந்தது; மன இருளும் அகன்றது. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அதனைத் தொடர்ந்து சமண சமயத்தை ஒழித்துச் சைவ சமயத்தை நிலை நாட்ட முயன்றனர். சமண சமயம் மக்களையும் மன்னனையும் இறுகப் பிடித்து இருந்த அப்பிடிப்பினை அப்பிடிப்பினை அகற்றிச் சமணருக்கு சிறந்தபடிப்பினையைப் புகட்ட விரும்பினார்.

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் திருஞான சம்பந்தரை அணுகிச் சைவ சமயத் தை நிலை நாட்ட அதன் தத்துவங்களையும் கொள்கைகளையும் பரப்ப உதவ வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அவர்களோடு வாதம் செய்து சைவத்தின் பெருமையை நிலை நாட்ட வேண்டும் என்று விவரித்தனர். அரசனிடமும் அனுமதி பெற்றனர். சமணர்களுக்குச் செய்தி சொல்லி அனுப்பப் பட்டது. அவர்களும் அதற்குச் சளைத்தவில்லை. நோய் தீர்த்து விட்டதாலேயே சைவம் உயர்ந்தது என்று கூற முடியாது. அது தனிப்பட்ட மனிதரின் மந்திர சக்தியாக இருக்கலாம். வாதிட்டு வெல்வதே சாதனை என்று அறிவித்தனர்.

அவர்கள் இரண்டு தேர்வுகள் வைத்தனர். ஒன்று அவரவர் சமயக் கோட்பாடுகளை எழுதி வைத்தும் ஏட்டை நெருப்பில் இடுவது; அவற்றுள் எது எரியாமல் நிலைத்து இருக்கிறதோ அதுவே வென்றது என்று ஏற்றுக் கொள்வது; மற்றொன்று வைகையில் அவ்வேடுகளை ஓடும் வெள்ளத்தில் இடுவது; எது எதிரேறி வெள்ளத்தில் அடித்துச் செல்லாமல் நிலைத்து நிற்கிறதோ அதுவே வெற்றி செய்தார்கள். கொண்டது என்று ஏற்பாடு செய்தனர். இரண்டு தேர்வுகளிலும் அவர்கள் தோல்வியையே கண்டனர். அவர்கள் முதலில் இட்ட ஏடு தீக்கு இரையாகியது. ஞானசம்பந்தர் இட்ட ஏடு எரியாமல் பசுமை யாகவே நின்றது. அதே போல வெள்ளத்தில் சமணர் இட்ட ஏடு பள்ளம் நோக்கி அடித்துச் சென்றது. ஞானசம்பந்தரின் ஏடு எதிரேறிச் சென்று கரையில் ஒதுங்கியது.

திருஞான சம்பந்தர் அவர்களை மன்னித்து இனியேனும் சைவ சமயத்தின் உயர்வை ஒப்புக் கொள்ளும்படி அறிவித்தார். ஒரு சிலர் திருநீறு அணிந்து சைவர்களாக மாறினர். பலர் தாம் அடைந்த தோல்வியை ஒப்புக் கொண்டு வலியக் கழுவில் ஏறி உயிர் துறந்தனர். எஞ்சியவர் ஆணைக்கு உட்பட்டுக் கழுவில் ஏற்றப்பட் டனர். சமணம் தலைசாய்ந்தது; சைவம் தலை நிமிர்ந்தது.

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அரசனைச் சைவ வழிக்குக் கொண்டு வந்து அவனைச்

சைவனாக்கிய தோடு நாட்டு மக்களிடமும் சைவத்தைப் பரப்பினர்.[3]

**கோயில்களில் காணப்படும் சிற்பங்கள்**

இறந்தவர்களை கடவுளாக வழிபடும் வழக்கம் சங்கக் காலத்தில் இருந்து இன்றளவும் வழிபட்டு வரும் முறை காணப்படுகின்றது. அந்த அளவில் கழுவேற்றப்பட்டவர்களையும் கழுமரத்தையும் தெய்வமாக வழிபடும் வழக்கம் இன்றளவும் காணப்பட்டு வருகின்றது. குறிப்பாக இத்தகைய முறைகள் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புல்லாணி அருகே பள்ளச்சேரியில் ஒரே கோயிலில் ஐந்து கழுமரங்கள் கழுவேற்றிக் கொல்லப்பட்ட வீரர்களின் நினைவாக இன்றும் உயிர்ப்புடன் தொடர்ந்து வழிபாட்டில் காணப்படுகின்றது.

இதனைக்கொண்டு இவ்வூரைச் சுற்றியுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புல்லாணியிலிருந்து கமுதி வழியாக மதுரை செல்லும் வழித்தடத்தில் அதிக அளவில் கழுமரங்கள் உள்ளன. உத்தரகோசமங்கை அருகே கண்ணன்குடி, கோவிந்தனேந்தல், கமுதி அருகே மண்டலமாணிக்கம் ஆகிய ஊர்களில் உள்ள கோயில்களில் கல்லாலான கழுமரங்கள் உள்ளன. களரியில் கழுமரம் கருவறை தெய்வமாக வணங்கப்படுகிறது.[4]

இதனை அடுத்து காஞ்சிபுரத்தில் சில கோயில்களில் கழுவேற்றச் சிற்பங்கள் காணப்படுகிறது. குறிப்பாக ஏகாம்பரநாதர் கோயில், வைகுந்த பெருமாள் கோயில்[1] என பல இடங்களில் கழுவேற்றச் சிற்பங்கள் கோயில்களில் காணப்படுகிறது.

**முந்தைய ஆய்வாளர்களின் ஆய்வுகள்**

கழுவேற்றம் பற்றிய ஆய்வுகளில் முந்தைய ஆய்வாளர்களான புலவர் சே. இராசு, முனைவர் வேதாச்சலம், முனைவர் க.ரமேஷ், கோ.செங்குட்டுவன், முனைவர் சாந்தலிங்கம், போன்றோர்களின் ஆய்வுகளின் கூற்றுகள் பல பெரும்பாலும் இவர்களுடைய கருத்துக்கள் திருவிளையாடல் புராணம் மற்றும் பெரியபுராணத்தில் கூறப்படும் சைவ சமண சமயத்தின் சச்சரவுகளை ஒட்டியே இவர்களின் கருத்துகள் அமைந்திருக்கின்றது.

கழுவேற்றச் சிற்பங்கள் பண்டையக் காலத்தில் ஆசிவர்களை பற்றி அசோகவதானம் நூல் குறிப்பிடுகிறது. அதில் ஆசிவகர்கள் 18,000 பேரை கழுவேற்றப்பட்டதாக ஒரு செய்தி இடம் பெறுகின்றது. இக்கழுவேற்றமானது சுமார் 2,000 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வழக்கம் பண்டைய இந்தியாவில் நடைமுறையில் இருந்து உள்ளது. இதனைப் பற்றி குறிப்புகள் பெரியபுராணத்திலும், திருவிளையாடல் புராணத்திலும் காணப்படுகிறது. எனவே மிகவும் முக்கியமான தண்டனை முறையாக பழங்காலத்தில் இருந்துள்ளது. இத்தண்டனைகள் பிற்காலத்தில் இருந்துள்ளது என்பதனை காட்டக்கூடிய அளவில் கோவில்களில் சிற்பங்களாக இலக்கிய மரபாக சைவம் வெற்றி பெற்றதாகவும், சமணத்தை வீழ்த்தப்பட்டதற்கான அடையாளமாவும் வைக்கப்படுகின்றன.

ஆனால் வைணவத்திலும் கழுவேற்றத் தண்டனை இருந்துள்ளது என்பதனைக் குறிப்பிடுவதை வைகுந்த பெருமாள் கோயில் சிற்பம் சான்றாக விளங்குகிறது.[3]

**கண்டாச்சிபுரத்தில் காணப்படும் கழுவேற்றச் சிற்பங்கள்**

கண்டாச்சிபுரம் வட்டம் தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தின் 9 வருவாய் வட்டங்களில் ஒன்றாகும். இவ்வட்டத்தின் வட்டாட்சியர் அலுவலகம் கண்டாச்சிபுரத்தில் இயங்குகிறது. விழுப்புரம் வருவாய் கோட்டத்தில் உள்ள கண்டாச்சிபுரம் வட்டம் முகையூர், அரகண்டநல்லூர் என இரண்டு பிர்கா எனப்படும் உள்வட்டங்களையும், 61 வருவாய் கிராமங்களையும் கொண்டது. இவ்வட்டத்தில் முகையூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் அரகண்டநல்லூர் பேரூராட்சி உள்ளது.[3]

இங்கு காணப்படும் வரலாற்று சிறப்பு மிக்க கழுவேற்ற சிற்பம் கண்டாச்சிபுரம் - திருக்கோயிலூர் செல்லும் சாலையில் இருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் ஓர் நடு வயல்வெளி பகுதியில் எந்த ஒரு கூடாரம், கோயில் இல்லாமல் வெட்ட வெளியில் கிழக்கு நோக்கிய படி ஒரு வேப்ப மரத்தின் அடியில் பாதி உருவங்கள் மண்ணில் புதைந்து போன நிலையில் காணப்படுகின்ன. கழுவேற்றப்பட்ட நிலையில் 5 சிற்பங்கள் காணப்படுகிறது. அதில் 3 கழுவேற்றம் ஏற்றப்பட்ட நிலையில் மற்ற 2 சிற்பங்கள் அவர்களை வணங்கியது போன்ற நிலையில் சிற்பங்கள் காணப்படுகிறது. இந்த கழுவேற்ச் சிற்பங்கள் உள்ளூர் மக்களால் வழிபட்டு வருகின்றனர். இச்சிற்ப அமைப்புகளை வைத்துப் பார்க்கும் போது 16 – 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என சிலையின் உருவ அமைதியைக் கொண்டு தெரிகிறது. வேறெங்கும் காணக்கிடைக்காத வகையில தனித்தனியாக சிற்ப நிலையில் பெண்கள் கழுவேற்றச் சிற்பங்கள் கண்டாச்சிபுரத்தில் காணப்படுகின்றன. குறிப்பிடத்தக்கவையாக பெண்களையும் கழுவேற்றப்பட்டுள்ளன என்பதை கண்டாச்சிபுரம் கழுவேற்றச் சிற்பங்கள் குறிப்பிடுகின்றன. இச்சிற்பங்களில் எவ்விதமான கல்வெட்டுகளும் காணப்பட வில்லை.

இச்சிற்பங்களை அங்கு வாழும் மக்கள் **கண்ணையார் கோயில் மற்றும் கண்டனைக்கார கோயில்** என்றும் குறிப்பிடுகின்றனர். களப்பயணத்தின் நாம் அது குறித்து உள்ளூர் மக்களிடம் விசாரிக்கும் போது தவறுகள் ஏதாவது செய்தால் அவர்களை கண்டித்து விடுவர் என்று நம்பிக்கைக் கொண்டுள்ளனர். எனவே

இச்சாமிக்கு ஆடு மாடும் அன்று பொங்கல் இட்டு படையல் போடுவார்கள் என்றும் குறிப்பிட்டனர். சிற்பத்தின் வடிவ அமைப்பும் அதன் முழு விவரங்களை கீழ்கண்ட வற்றுள் காண்போம். இங்கு ஐந்து சிற்பங்கள் காணப்படுகிறது. கண்டராச்சிபுரம் கழுவேற்றச் சிற்பங்கள் இடம் இருந்து வலமாக காண்போம்,



**இடம் இருந்து வலமாக காணவும்**

**சிற்பம் 1**

இச்சிற்பம் சிறியதாகவும் பெண் உருவம் கொண்ட சிற்பமாகவும் காணப்படுகிறது. இச்சிற்பம் கழுமரம் ஏற்றப்பட்டவர்களை வணங்கியது போன்று கைகளைக் கூப்பியபடி வணங்கிக் கொண்டு உள்ளது. இச்சிற்பம் முழுமையுமாக காணப்படவில்லை பாதி பகுதி வெளியேயும் பாதி பகுதியின் அடிப்பகுதியிலும் காணப்படுகிறது. கைகளில் வளையல்களும் கொண்டு உள்ளது. ஜடா முடி கொண்டு காணப்படுகின்றது. அதன் தடிமன் 4½ செ.மீ தடிமன் கொண்டு உள்ளது. அகலம் 8½ செ.மீ அகலம் கொண்டு காணப்படுகிறது. அதன் நீலம் 1 அடி 4½ செ.மீ நீலம் கொண்டு உள்ளது.[3]

**சிற்பம் 2**

இச்சிற்பம் ஓர் ஆண் சிற்பம் ஆகும். இச்சிற்பம் முக்கால் பங்கு மண்ணின் மேல் பகுதியில் காணப்படுகிறது. மிகவும் துல்லியமாக காட்டப்பட்டுள்ள சிற்பங்களில் இதுவும் ஒன்றாகும். இச்சிற்பத்தில் கழுமரமானது அடி பகுதி முதல் மேல் கூர்மையான பகுதி வரை முழுமையாக காணப்படுகிறது. இச்சிற்பத்தின் கையில் காப்பும் கழுத்தில் கழுத்தணியும் கொண்டு உள்ளது. ஆடைகள் இல்லாமலும் காணப்படுகிறது. வலது கை மேல் நோக்கியும், இடது கை கழு மரத்தை பிடித்தபடியும் காணப்படுகிறது. வலது கால் மேல் வைத்த படியும் இடது கால் கீழே விட்ட படியும் காணப்படுகிறது. இச்சிற்பம் ஜடா முடிக் கொண்டு காணப்படுகிறது. இச்சிற்பத்தின் தடிமன் 4 செ.மீ கொண்டும், அகலம் 1 அடி 8½ செ.மீ மற்றும் அதன் நீளம் 3 அடி கொண்டு காணப்படுகிறது.[4]

**சிற்பம் 3**

இச்சிற்பம் ஒரு பெண் சிற்பம் ஆகும். இச்சிற்பம் கழுமரம் இல்லாமல் நின்ற நிலையில் எவ்வித ஆடைகள் இல்லாமல் காணப்படுகிறது. இச்சிற்பம் வலது கை மேல் நோக்கியும், இடது கை கீழே விட்ட படியும் காணப்படுகிறது. ஜடா முடிக் கொண்டு காணப்படுகிறது. இச்சிற்பம் முழுமையாக தெரியாமல் பாதியாக மண்ணின் மேல் பகுதியில் காணப்படுகிறது. எவ்வித அணிகலன்கள் இல்லாமல் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் தடிமன் 6 செ.மீ மற்றும் இதன் அகலம் 2 அடி கொண்டும் இதன் நீளம் 3 அடி5 செ.மீ கொண்டு காணப்படுகின்றது.[4]

**சிற்பம் 4**

இச்சிற்பம் ஒரு பெண் கழுவேற்றப்பட்ட நிலையில் காணக்கூடிய பெண் சிற்பம் ஆகும். இச்சிற்பத்திற்கு மார்பகம் காட்டப்பட்டு உள்ளது. இச்சிற்பத்திற்கு ஆடைகள் ஏதும் இல்லாமல் திறந்த மேனியாக உள்ளது. இச்சிற்பத்திற்கு காதணிகள் மற்றும் கழுத்தணிகள் கொண்டும் காணப்படுகிறது. இச்சிற்பம் வலது கை மேல் நோக்கிய படியும், இடது கை கழுமரத்தை பிடித்த படியும் காணப்படுகிறது. தனது வலது கால் மேல் வைத்து, இடது கால் கீழே தொங்க விட்ட படியும் காணப்படுகிறது. ஜடா முடிக் கொண்டு காணப்படுகிறது. இச்சிற்பமும் பாதி மண்ணில் புதைந்த நிலையில் காணப்படுகிறது. இதன் தடிமன் 6½ செ.மீ கொண்டும், இதன் அகலம் 2 அடி 2 செ.மீ கொண்டும் இதன் நீலம் 3 அடி 8 செ.மீ கொண்டும் காணப்படுகின்றது.[3]

**சிற்பம் 5**

இச்சிற்பம் ஓர் பெண் சிற்பம் ஆகும். இதில் பெண்ணின் மார்பகம் காட்டப்பட்டு உள்ளது. இச்சிற்பத்திற்கு ஆடைகள் ஏதும் இல்லாமல் திறந்த மேனியாக உள்ளது. இச்சிற்பத்திற்கு காதணிகள் மற்றும் கழுத்தணிகள் கொண்டும் காணப்படுகிறது. இச்சிற்பம் வலது கை மேல் நோக்கிய படியும், இடது கை கழுமரத்தை பிடித்த படியும் காணப்படுகிறது. தனது வலது கால் மேல் வைத்து, இடது கால் கீழே தொங்க விட்ட படியும் காணப்படுகிறது. ஜடா முடிக் கொண்டு காணப்படுகிறது. இச்சிற்பம் பாதி மண்ணில் புதைந்த நலையில் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் தடிமன்

*அளவு 5 செ.மீ கொண்டும் 2 அடி 2 செ.மீ அகலமும், இதன் நீளம் 2 அடி கொண்டும் காணப்படுகின்றது.*[3]

**முடிவுரை**

*பண்டையக் காலத்தில் மிகக்கடுமையான தண்டனைப் போக்குகள் எல்லாம் இருந்திருக்கின்றன என்பதற்கு இக்கழுவேற்றச் சிற்பங்கள் ஆதாரமாக இருக்கின்றது. ஆனால் இக்கழுவேற்றச் சிற்பங்கள் தொடர்ச்சியாக சமண சைவச் சச்சரவின் ஊடாகவே நிறைய கோயில் இடங்களில் கிடைக்கின்றது. இதனை பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் கழுவேற்றம் படலம் நடந்தது உள்ளது என்று குறிப்பிடுகிறார்கள். இதில் ஒரு மரபாகவே தென் மண்டலங்களில் ஒரு விழாவாகவே கொண்டாடப்படுவது என்பது தெரிந்த ஒன்றாக காணப்படுகிறது. இதனை ஆண்டுக்கு ஒரு முறையாக சிறப்பான விழாவாக கொண்டாடப்படுகிறது.*

*ஆனால் கண்டாச்சிபுரத்தில் காணப்படும் கழுவேற்றச் சிற்பங்கள் சமண சைவ சண்டையின் காரணமாக வந்த கழுவேற்றமாக தெரியவில்லை. இவைகள் கோவில்களில் கிடைக்கவில்லை ஊருக்கு வெளியில் கிடைக்கின்றது. அப்பொழுது 16-17 ஆம் நூற்றாண்டுகளில் கழுவேற்றம் ஏற்பட்டு உள்ளன. அவர்கள் இறந்து போனதை உருவமாக செய்து வைத்து அதையும் தெய்வமாக வழிபடும் ஒரு மரபு விழுப்புரம் மாவட்டத்தில் கண்டாச்சிபுரம் கிராமத்தில் அமைந்துள்ள இச்சிற்பங்களே மிகச் சிறந்த சான்றாக விளங்குகிறது. இதனைப் போன்று வேறெங்கும் தனிச் சிற்பமாக கிடைத்ததாக அறியப்பட வில்லை. இக்கண்டாச்சிபுரம் சிற்பங்கள் வரலாற்று சிறப்பு மிக்க அளவில் முக்கியத்துவம் வாய்தவையாக அமைகின்றது.*

**புகைப்படங்கள்**



***திருப்புல்லாணி அருகே கழுவேற்றிக் கொள்ளப்பட்ட வீரர்களின் நினைவுத் தூண்கள்***



***சிற்பம் 1***



***சிற்பம் 2***



*சிற்பம் 3*



*சிற்பம் 4*



*சிற்பம் 5*

**சான்றெண்விளக்கம்**


1. *பெரியபுராணம் பாடல் எண் 2754*
2. *திருமந்திரம் 10.6.11.4*
3. *ரா. சீனிவாசன், திருவிளையாடல் புராணம், ப-175*
4. *திருப்புல்லாணி அருகே ஒரே கோயில் ஐந்து கழுமரங்கள், (எஸ்.முஹம்மது ராஃபி)*
5. *The Vaikunta Perumal Temple At Kanchipuram, D.Dennis Hudson*
6. *கொங்கு நாட்டு சமணம், செ.இராசு*
7. *நேர்காணல், வருவாய் வட்டாச்சியர் அலுவலகம், 08.10.2023*


******